சென்னை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள், சென்னை-08

நக.எண். 8666 /அ4 /2021     நாள். 27.07.2022

பொருள் : பள்ளிக் கல்வி - விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் திட்டம் - 2021-2022 ஆம் கல்வியாண்டு - அரசு/ அரசு உதவி பெறும் /பகுதி நிதி உதவி பெறும்/ ஆதிதிராவிட நலம் மற்றும் சென்னை மேல்நிலைப் பள்ளிகளில் 2021-2022 ஆம் கல்வியாண்டில் 11 ஆம் வகுப்பு பயின்ற மாணவ , மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்குதல்- தலைமையாசிரியர்களுக்கு அறிவுரை வழங்குதல் - தொடர்பாக

பார்வை :
1. சென்னை-05, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை, சேப்பாக்கம், இயக்குநரின் கடிதம் நக.எண். டி3/2255/2021 நாள். 27.12.2021 மற்றும் 01.07.2022
2. சென்னை-05, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை, சேப்பாக்கம், ஆணையரின் கடிதம் நக.எண். டி3/2255/2021 நாள். 31.05.2022, 07.06.2022 மற்றும் 26.07.2022
3. சென்னை-05, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை, சேப்பாக்கம், ஆணையரின் கடிதம் நக.எண். டி3/4788/2022 நாள். 20.07.2022
4. சென்னை-06, பள்ளிக் கல்வி ஆணையரக இணை இயக்குநரின் (தொழிற்கல்வி) செயல்முறைகள் நக.எண். 22797/இ/இ1/2021 நாள். 22.02.2022 மற்றும் 26.07.2022

-----------

2021-2022 ஆம் கல்வியாண்டில் 11 ஆம் வகுப்பு பயின்ற மாணவ/மாணவியர்களுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், 25.07.2022 அன்று விலையில்லா மிதிவண்டிகள் வழங்கி திட்டப் பணிகளை தொடங்கி வைத்துள்ளார் .

அதன் தொடர்ச்சியாக சென்னை மாவட்டத்தில் 2021-2022 ஆம் கல்வியாண்டில் அரசு/அரசு உதவி பெறும் பகுதி நிதி உதவி பெறும் / சென்னை பள்ளிகள் மற்றும் ஆதிதிராவிட நல மேல்நிலைப் பள்ளிகளில் 11 ஆம் வகுப்பு பயின்ற மாணவ/மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள் மாண்புமிகு அமைச்சர்கள்/ நாடாளுமன்றம், சட்டமன்ற உறுப்பினர்கள், மேயர், மாமன்ற உறுப்பினர்கள் , மாவட்ட ஆட்சியர் மக்கள் பிரதிநிதிகள் மற்றும் பள்ளி பெற்றோர் ஆசிரியர் கழக நிர்வாகிகளை கலந்தாலோசித்து அவர்களின் பங்கேற்புடன் கோவிட்-19 தொற்று தொடர்பாக அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றியும் (SOP), எவ்வித புகாருக்கும் இடமளிக்காமலும், மாணவ மாணவியருக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கிடுமாறு அனைத்து அரசு/அரசு உதவி பெறும் பகுதி நிதி உதவி பெறும் / சென்னை

பள்ளிகள் மற்றும் ஆதிதிராவிட நல மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் மாணவர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்பட்ட விவரத்தினை உரிய பதிவேட்டில் பதிவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். மேலும் விலையில்லா மிதிவண்டிகள் மாணவர்களுக்கு வழங்கப்பட்ட விவரத்தினை முதன்மைக் கல்வி அலுவலக மின்னஞ்சல் முகவரிக்கும் (ceochn@nic.in) சார்ந்த மாவட்டக் கல்வி அலுவலக மின்னஞ்சல் முகவரிக்கும். அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்படுகிறது.

முதன்மைக் கல்வி அலுவலர்

சென்னை

27/7/2022

பெறுநர்

அனைத்து அரசு/அரசு உதவி பெறும் பகுதி நிதி உதவி பெறும் / சென்னை பள்ளிகள் மற்றும் ஆதிதிராவிட நல மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள், சென்னை மாவட்டம்

நகல்

1. அனைத்து மாவட்டக்கல்வி அலுவலர்கள், சென்னை மாவட்டம் (தொடர் நடவடிக்கைக்காக)
2. சென்னை-03., பெருநகர சென்னை மாநகராட்சி, கல்வி அலுவலர் அவர்களுக்கு கனிவுடன் அனுப்பப்படுகிறது.
3. சென்னை-05, சேப்பாக்கம் பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் அவர்களுக்கு பணிந்து அனுப்பப்படுகிறது.
4. சென்னை-05, சேப்பாக்கம் பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர் அவர்களுக்கு பணிந்து அனுப்பப்படுகிறது.
5. சென்னை -01, மாவட்ட ஆட்சியர் அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு பணிந்து அனுப்பப்படுகிறது.
6. சென்னை-06, பள்ளிக் கல்வி ஆணையரகம், பள்ளிக் கல்வி ஆணையர் அவர்களுக்கு பணிந்து அனுப்பப்படுகிறது.